சென்னை–6, தொழிலாளர் துணை ஆணையர் (பணிக்குழு மற்றும் பொது) அவர்களின்
செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு. மோ. மு. கமலக்கண்ணன்., எம்.காம்., எம்.பில்., எம்.பி.ஏ.,

சுருக்கம்

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு. ச. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், தொழிலாளர் ஆணையர் அலுவலகம், சென்னை–6 – 13.06.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை அரசால் செய்யப்பட்டது – தகுதிகாண் பருவத்தில் வைத்தல் – ஆணை – வெளியிடல்.

ஜி3/1068/2017

நாள்: 29.09.2020.

படிக்கப்பட்டது

1. அரசாணை (3D) எண். 15, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (இ2) துறை, நாள்: 15.09.2020.
2. தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் சிறப்புவிதிகள், விதி 34 உடன் பிற்சேர்க்கை V.

********

<u>ஆணை :</u>

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணை மூலம் சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. ச. தினேஷ் குமார் என்பவரின் பணியினை 13.06.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே, அன்னாரை 13.06.2018 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைத்தும், அன்னார் பணியில் சேர்ந்த 13.06.2018 முற்பகல் முதல் தொடங்கும் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

தனியருக்கு தகுதிகாண் பருவ காலத்தில் அன்னார் பவானிசாகர் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்ய வேண்டும் என்றும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும், மேலும் அப்பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

அன்னாரின் பணி முன் தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், அவற்றினை நடைமுறையில் உள்ள விதிகளின்படி, பெற தகுதியுடையவராகிறார் என்றும் அரசாணையின்படி உத்தரவிடப்படுகிறது.

Scanned with CamScanner

இதனால் எழும் நிலுவைத் தொகையினை அன்னாருக்கு பெற்று வழங்க இவ்வலுவலக நிர்வாக அலுவலர் (குறைந்த பட்ச ஊதியம்) அவர்கள் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்/– மோ. மு. கமலக்கண்ணன்
தொழிலாளர் துணை ஆணையர்
(பணிக்குழு மற்றும் பொது)

பெறுநர்
திரு. ச. தினேஷ் குமார்,
இளநிலை உதவியாளர்,
இவ்வலுவலகம்.

நகல் :

1. சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை.
2. நிர்வாக அலுவலர் (குறைந்த பட்ச ஊதியம்), இவ்வலுவலகம்.
3. இவ்வலுவலக 'ஆர்' பிரிவு மற்றும் 'ஜி4' இருக்கை.

அனுப்பப்படுகிறது//

தொழிலாளர் துணை ஆணையருக்காக
(பணிக்குழு மற்றும் பொது)

01.10.2020.

Scanned with CamScanner